# இலக்கண நூல்களில் புலப்பாட்டு நெறி

(தொல்காப்பியம் எழுத்ததிகாரம்)

டாக்டர் சு. சாமிஐயா எம். ஓ. எல்., பிஎச். டி.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

# இலக்கண நூல்களில் புலப்பாட்டு நெறி

(தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்)

டாக்டர் சு. சாமிஐயா, எம். ஓ. எல்.,பிஎச். டி.

தமிழ்த்துணைப் பேராசிரியர்

புலப்பாடு என்பது உள்ள்வெளிப்பாடு. மெய்ப்பாடு என்பது பொருள் புலப் பாடு என்றாற்போன்று உள்ள வெளிப்பாடு புலப்பாடு எனப்படும். பொதுவாகக் கலைகள் ஒவ்வொன்றிற்கும் ஒருவகைப் புலப்பாட்டியல்பு உண்டு என்பது யாவரும் உணர்ந்ததே. இசை கண்டத்தாலும், கருவியாலும் பல்வேறு வகைப் புலப்பாட்டினைக் கொண்டுள்ளது. நாடகம், வசனம், பாட்டு, பாவம் என்ற முத்திறத்தினால் உள்ளக் கருத்தினை வெளிப்படுத்தும் இயல்புடையது. இலக்கியம், கற்பனை, உத்தி, நடை, போன்றவற்றால் புலப்படுத்தும் இயல்பினது. இவற்றைப் போலவே இலக்கண ஆசிரியர்களும் பல்வேறு புலப் பாட்டு நெறிகளைப் பின்பற்றியுள்ளனர். அவ்வகை நெறிகளுள் பலவற்றை நூல் செய்யும் முறையாகக் கூறிச் சென்றுள்ளனர். தொல்காப்பியர் மரபியலில் பதினேழு நூற்பாக்களில் (தொல் மரபு 94–110) நூல், உரை முதலியவற்றின் இலக்கணங்களைக் கூறியுள்ளார். நன்னூல் பாயிரத்தில் பல்வேறு நெறிகள் கூறப்பெற்றுள்ளன.

தொல்காப்பியர், பவணந்தியார் போன்ற இலக்கண ஆசிரியர்கள் கூறிய நெறிகள் இலக்கண நூல்களில் எவ்வாறு போற்றப் பெற்றுள்ளன என்று காண்பது இலக்கண நூலாரின் புலப்பாட்டு நெறியுள் ஒரு கூறாக அமையும். எனினும், நூல்களில் வேறு வகையில் அமைந்து கிடக்கின்ற நெறிகளைக் காண்பதும் இன்றியமையாததாகும். இலக்கண நூல்கள் கூறுகின்ற நெறிகளைப்பொதுக் கூறுகள் எனவும் ஆழ்ந்து பார்த்து அவ்வந் நூல்களில் காணப் பெறும் நெறிகளைச்சிறப்புக் கூறுகள் எனவும் கூறலாம். நூல் வடிவில் வெளிபிடக் கூடிய இத்தலைப்பினைத் தொல் காப்பியம் எழுத்ததி காரத்தில் காணப்படும் சிலநெறிகளை மட்டும் ஈண்டுக் காணலாம்.

தொல்காப்பியர் அதிகார இயல்களை ஒத்த எண்ணிக்கையில் பகுத்துள்ளார். இவ்வாறு ஒரு வகை நெறியை எண்ணி அமைத்ததனால் சில கருத்துக்களை விரித்துரைக்க வேண்டிய இன்றியமையாமை அவருக்கு ஏற்பட்டது எனலாம். வேற்றுமையை, வேற்றுமையியல் வேற்றுமை மயங்கியல், விளிமரபு என முக்கூறுகளாகப் பேசுகின்றார். வடமொழி நூலாகிய பாணிணீயத்துள் அதன் ஆசிரியர் தமக்கு முன்பிருந்த இலக்கண ஆசிரியர் ஒன்பதின்மரைப் பெயர் சுட்டிக்கூறியுள்ளார். ஆனால் தொல் காப்பியர் தமக்கு முன்பிருந்த ஆசிரியர்களைப் பொதுவாகச் சுட்டிச்செல்கின்றாரேயன்றிப் பெயர் சுட்டி கூறினாரில்லை இம்மரபு வழிவழியாகப் பின் பற்றப் பட்டுள்ளது எனலாம். இவ்வாறு பொது நிலையில் அன்றிச் சிறப்புநிலையில் எழுத்ததிகாரத்தில் காணப்படும் புலப்பாடு பற்றி ஆராயலாம். விதி கூறும் நிலையில் தொல்

காப்பியர் ஆளுகின்ற சொற்களால் விதிகளின் வலிவும் நலிவும் எவ்வாறு விளங்குகின்றன என்று காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

எழுத்ததிகாரத்தில் அல்வழியான, அலங்கடை, அற்றே, அன்ன, ஆகும், ஆகா, ஆன, இயல்பே, இயல, இயலும், இயற்கை, இயற்றே, இல்லை, இலவே, இன்றே, உடைத்தே, உண்டே, உரிய, உளவே, உறழ்வே, என்மனார், என்ப, ஒக்கும், ஒத்தது, ஒற்றும், காலை, கெடும், கெடுத்தே, குறுகும், குறுகிடன், கொளலே, சிவணும், சுட்டு, திரியாது, தெரியுங்காலை, தொழிற்கே, தோன்றாது, தோன்றிய நெறி, தோன்றும், நவிலா, நிலையல், நிலைத்தே, நிலையும், நிலையாது, நிலையா, நிற்றல், நிறைக்கும், நிறைவாகும், நிறைபிலவே, நீடும், நுவன்றிசின், பணபே, பயின்றே, பொருட்டாகும், மரபே, மானமில்லை, மிகா, மிகும், முதலாது, முதலே, வரின், வருமே, வரையார், வலிக்கும், விரவும், வேண்டும் என்னும் சொற்கள் விதிகளைப் புலப்படுத்தும் சொற்களாக அமைந்துள்ளன. இவற்றின் புலப்பாட்டுத் தன்மைகளை இனிக் காணலாம்.

அல்வழியான என்னும் சொல் மூன்றிடங்களில் பயின்றுள்ளது.[1]

அல்வழி என்பதற்கு அல்லாத இடத்து எனவும், வேற்றுமை அல்வழி என்னும் இருவகைப் புணர்ச்சிகளுள் அல்வழி புணர்ச்சி எனவும் இச்சொல் இருவகைப் பொருள் தந்து நிற்கின்றது. தொல்காப்பியர் இவ்விருவகைப் பொருள்களில் இரண்டினையும் ஆட்சி செய்துள்ளார். 196, 437 ஆகிய இருநூற்பாக்களிலும் அல்லாத இடத்து என்னும் பொருள்பட இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 423-ஆம் நூற்பாவில் அல்வழிப்புணர்ச்சிக்கண் என்னும் பொருள்பட இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இளம்பூரணர் நச்சினார்க்கினியர் ஆகிய இருஉரையாசிரியர்களும் ஒருபொருளையே கொணடுள்ளனர்.

அலங்கடை என்னும் சொல் ஐந்து இடங்களில் பயின்றுள்ளது.[2] ஒரு தொகைச் சொல்லினின்றும் விலக்குப் பெறுகின்ற ஒன்றைச் சுட்டும்போது 'அலங்கடை' என்னும் சொல் பயின்றுள்ளது! 'அல் வழி' என்பது அல்லாத இடத்து என்னும் பொருளுடையதாயினும் ஒரு தொகைச் சொல்லினின்றும் விலக்குப் பெறாத நிலையில் பயின்றுள்ளது என்பது இவ்விரு சொற்களுக்கும் உரிய வேறுபாடு எனலாம்.

எழுத்துக்களை அறிமுகம் செய்யவரும் பொழுது அதன் தொகை முப்பத்து மூன்றெனினும், அவற்றுள் முப்பதை முன்னரும் மூன்றினைப்

1. தொல் எழுத்து 196, 423, 437

2. தொல் எழுத்து: 1, 30, 62, 72, 433

பின்னரும் அறிமுகப்படுத்துகின்றார். (நூ. 1, 2) சார்பெழுத்துக்கள் மூன்றும் சேராஇடத்து முப்பஃது எனக் கூறுகின்றார் உடனிலை மெய்ம்மயக்கத்தைக் கூறுமிடத்தில் (நூ 30) வேற்றுநிலைமெய்ம்மயக்கத்தை விலக்க வேண்டிய இடத்தில் 'அலங்கடை' என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றார் சிறுபான்மையை விலக்கிப் பெரும்பான்மையைத் தழுவுகின்ற நிலையில் இச்சொல் பயன்படுகின்றது எனக் கொள்ளலாம்.

அன்ன என்ற சொல் ஆறு இடங்களில் பயின்றுள்ளது[3]. அன்ன என்பது உவமைவுருபுகளுள் வினையுவமைக்கண் பயின்று வருவதாகக் கூறப் பெற்றுள்ளது[4]. அன்ன என்பது முன்னர் கூறியதோர் விதியைத்தழுவிப் பின்னர் வருகின்ற விதியும் அமையும் என்னும் நிலையில் அமைந்துள்ளது. முதன்மை விதிக்குரிய தன்மை முழுமையும் தழுவியமைக்கப்படுகின்ற விதிக்கு இல்லாமையும் நினைக்கத் தகுவதாகும். முதலெழுத்துக்கள் போன்றே சார் பெழுத்துக்களும் எழுத்து என்ற வரிசையில் இடம் பெறும் ஆனாலும், அவை தனித்து நிற்கும் ஆற்றல் உடையவை அல்ல என்பது புலப்படுமாறு 'அன்ன' என்ற சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது. மேல் விதியைத் தழுவுமிடத்தும், முதன்மை விதிக்குரிய சிறப்பில்லாத இடத்தும் இச்சொல் பயன் பட்டுள்ளது என்லாம். 'அவற்றோரன்ன[5] முந்து] கிளந்தன்ன[6]' என்னும் இடங்கள் மேல் விதியைத் தழுவுதற்குச் சான்றாகும்.

அற்றே என்னும் சொல் பன்னிரண்டிடங்களில் பயின்று வந்துள்ளது[7]. 'அற்று' என்பது அற்றது என்றும், அத்தன்மைத்து எனவும் பொருள் படுகின்ற ஒரு சொல். இதனைச் சாரியை என்பர் நன்னூலார்.[8] அது போன்றது என உவமவுருபாக இது ஆளப்பெற்றுள்ளது.

> "துறந்தார் பெருமை துணைக் கூறின்வையத்
> திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று[9] "

என்ற குறளில் இது உவம உருபாகவே ஆளப்பெற்றுள்ளமை கருதத்தக்கது. தொல்காப்பியர் அற்றது அதாவது நீங்கியது என்னும் பொருளிலும் அது போன்றது என்னும் பொருளிலும் இச்சொல்லை ஆண்டுள்ளார். அது

---

3. தொல். எழுத்து. 2, 86, 231, 236, 286 328
4. தொல் பொருள் உவமை 12.
5. தொல். எழுத்து] 86, 231, 328
6. மேலது; 286
7. தொல். எழுத்து; 16, 126, 216, 225, 238, 252, 259, 266, 276, 298, 318, 385.
8. நன். 244.
9. குறள் . 22.

போன்றது என்னும் பொருளிப் ஆட்சி செய்யும்போது அது என்னும் சுட்டையும் பெரும்பாலும் சேர்த்தும் சிறு பான்மை சுட்டின்றியும் ஆளுகின்முர்.

"எகர ஒகரத்தியற்கையும் அற்றே[9]" என்ற இடத்தில் சுட்டின்றி இயல்பிற்று என்னும் பொருளில் ஆண்டுள்ளார்.

"இக்கிள் இகரம் இகரமுனை அற்றே"[10] என்ற இடத்தில் அற்றது அல்லது கெடும் என்னும் பொருளில் ஆண்டுள்ளார். முன்னையது போன்று இவ்விதியும் கருதத்தக்கது என்னும் இடங்களில் "அதனோரற்று[11]," எனவே ஆண்டுள்ளார் என்பது கருதத் தக்கது.

ஆகா என்னும் சொல் நான்கிடங்களில் பயின்றுள்ளது[12]. ஆகா என்பது ஆகார ஈற்று எதிர்மறைச் சொல் பன்மைக் குறிப்புத் தோன்ற வரும் ஆகா என்று ஆளுகின்ற இடங்களில் இவை ஆகா என்னும் பொருள் பயப்ப தோடு மற்றையன ஆகும் என்னும் குறிப்புத்தோன்ற இச்சொல்லைத்தொல் காப்பியர் ஆண்டுள்ளார்.

அவற்றுள் ரகார ழகாரங் குற்றொற்றாகா"

(தொல் எழுத்து 49)

என்ற நூற்பாவில் குறிற்கீழ் ரகாரமும், ழகாரமும் ஒற்றாக வாராது எனவும் நெடிற்கீழ் ஒற்றாகும் என்றும், குறிற்கீழ் உயிர்மெய்யாம் எனவும் இளம் பூரணரும், நச்சினார்க்கினியரும் பொருள் கொண்டுள்ளனர்.

"உயிர்மெய் அல்லன மொழி முதலாகா"

(தொல் எழுத்து 60)

என்ற இடத்திலும், மெய் முதலாகா உயர்மெய் மொழி முதலாகும் என்றும் பொருள் படுகினறமையைக் காணலாம். இவ்வாறு கூறுவதால் சூத்திரம் பல்காமையைக் காணலாம் என்னும் குறிப்பினை இளம்பூரணர் தருகின்றார்.

ஆகும் என்னும் சொல் ஐம்பத்து நான் கிடங்களில் பயின்றுள்ளது[13] 'ஆகும்' என்பது ஆக்கச் சொல்; ஆக்கச்சொல் வரும் பொழுது இயற்கை

9. தொல் எழுத்து 16
10. மேலது 126
11. மேலது 216, 225, 238, 252, 259, 266, 276, 298, 318, 385
12. மேலது 49, 60, 272, 407
13. தொல்; எழுத்து. 48, 51, 54, 55, 59, 69, 70, 128 129, 139, 144, 149, 179, 187, 241, 250, 255, 257, 258, 275, 290, 293, 294, 314, 321, 326, 332, 335, 343, 340, 358, 367, 379, 380, 384, 386, 397, 414, 425, 428, 436, 442, 443, 444, 445, 448, 452, 453, 456, 461, 466, 467, 468, 473.

மாறிச் செயற்கைத் தன்மை எய்தும் என்பது தொல்காப்பியர் கருத்து.[14] முன்னிருந்த இயல்பு மாறிச் செயற்கைத் தன்மை எய்துங்கால் 'ஆகும்' என்று கூறுகின்ற நிலையினைக் காணலாம் ய, ர, ழ, என்னும் ஒற்றுக்களின் முன் க, ச, த, ப, ங, ஞ, ந, ம வரின் ஈரொற்றாய் வரும், இது ஒரு வகையில் செயற்கை என்பதால் ஆகும், என்பதனை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.[15] "மூன்றனொற்றே நகரகமாகும்"[16] என்னும் நூற்பாவில் மூன்று என்னும் சொல்லின் முன் நூறு வந்தால்னகரம் நகரமாகும் எனக்குறிப்பிடுகின்றார்.

'ஆன' என்னும் சொல் தனித்து நின்று பொருள் தராததோர் இயல்பினை உடைய ஒட்டுச் சொல். இச்சொல் வேறு ஒரு சொல்லுடன் கூடி ஏழாம் வேற்றுமைப் பொருள்பட நிற்கின்றது. இவ்வொட்டுச் சொல் முப்பத் தொரு இடங்களில் பயின்றுள்ளது. அவ்வாறு பயிலும் இடங்களில் ஆவயின்[17], இவணை[18], இறுதி[19], காட்சி[20], காலை[21], செய்யுள்[22], தொடரியல்[23], நிலையியல்[24], மருங்கின்[25], மொழிவயின்[26], வயின்[27], வழக்கத்து[28] என்னும் சொற்களுடன் சேர்ந்து ஆவயினான, இவணையான, இறுதியான, காட்சியான, செய்யுளான, தொடரியலான, நிலையியலான, மருங்கினான, மொழிவயினான, வாயினான, வழக்கத்தான என நிற்கின்றது.

வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்தல் வழி
மேற்கூறியற்கை ஆவயினான (தொல் எழுத்து 148)

அ+வயின்+ ஆன என்னும் மூன்று சொற்கள் இயைந்து நின்றன. இவற்றுள் அ என்னும் சுட்டு நீண்டு ஆ என ஆயிற்று. வயின் என்பது ஏழாம் வேற்றுமை உருபு அவ்வுருபினைச் சிறப்பித்த சொல்லாக ஆன என்பது வந்துள்ளது. இவ்வாறே பிற சொற்களோடும் இயைந்து ஏழாம்

---

14. தொல் சொல் 20
15. தொல் எழுத்து 48
16. மேலது 461.
17. தொல் எழுத்து 148, 200, 240, 261,284, 292, 296, 315,320, 438, 455
18. தொல் எழுத்து 80.
19. மேலது 145, 189
20. மேலது 83
21. மேலது 40, 399, 430, 432
22. மேலது 316
23. மேலது 356
24. மேலது 68
25. மேலது 350
26. மேலது 57,143
27. மேலது 439,481
28. தொல் எழுத்து 240, 270, 312, 457

வேற்றுமைப் பொருளை உறுதி செய்யும் நிலையில் இவ்வாறு பயின்று உள்ளமையை அறியலாம். ஆயினும்

"திரிபு வேறு கிளப்பின் ஒற்று முகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணரும் காலையான" (தொல் எழுத்து 432)

என்னும் நூற்பாவிற்கு உரைகொள்ளும் இளம் பூரணர் 'ஆன' என்பதை அசையாகக்கொண்டுள்ளார். ஆனால் நச்சினார்க்கினியர் தெற்கொடு புணருங் காலை, எனவும், 'ஆன ஒற்றுமெய் திரிந்துனகாரமாகும், என்று ஆன என்பதற்குப் பொருந்தி நின்ற என்றும் பொருள் கொண்டுள்ளார் என்பது சிந்திக்கத்தக்கது. காலையான என்ற நிலையில் சேர்ந்து வருகின்ற 'ஆன' என்ற சொல்சேராமல் ஏழிடங்களில் பயின்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது (தொல் எழுத்து 112, 302, 317, 446, 449, 471) எனவே ஆன என்பது ஏழாம் வேற்றுமைப் பொருளைச் சிறப்பிக்கும் தன்மையிலும் 'ஆகிய' என்ற பொருளிலும், அசையாந் தன்மையிலும் ஆளப்பட்டுள்ள சொல்லாகக் கருதலாம்.

இயல என்னும் சொல் நான்கு வடிவில் காணப்படுகின்றது. இயல்பே இயலும், இயற்கை, இயற்றே என்ற வடிவுகளில் பயின்றுள்ள நிலையைக் காணலாம். நரற்பத்தே ழ இடங்களில் பல்வேறு வடிவங்களில் இயல என்னும் சொல் பயின்றுள்ளது[29]

"குறுமையும் நெடுமையும் அளவிற்கோடலின்
தொடர் மொழி யெல்லாம் நெட்டைழுத்தியல"

(தொல் எழுத்து 50)

என்ற நூற்பாவில் 'இயல' என்னும் சொல் இயல்பையுடைய என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

அவற்றுள், அ ஆ ஆபிரண்டங்காந்நிபலும் (தொல் எழுத்து 85)

என்ற நூற்பாவில் இயலும் என்னும் சொல் பிறக்கும் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்குச் செல்லும் அல்லது வெளிப்படும் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. வெளிப்படும் அல்லது பிறக்கும்என்னும் பொருளிலேயே மற்றைய இடங்களிலும் காணப்படுகின்றது,

29 தொல் எழுத்து 50, 85, 87, 101, 103, 106. 107, 108, 163, 165, 166, 221, 239, 249, 254, 256, 260, 262, 263, 264, 274, 278, 282, 289, 291, 300, 303, 304, 306, 313, 319, 327, 336, 338, 345, 359, 362, 366, 371, 373, 376, 383, 396, 401, 403, 450, 460.

"உயிர்மெய் ஈறும் உயிரீற்றியற்றே" (தொல் எழுத்து 106)
என்னும் நூற்பாவில் இயற்று என்னும் சொல்லை இயல்பினையுடைத்து என்னும் பொருளில் ஆண்டுள்ளார். இயல என்பது இயல்பினையுடைய என்றும் இயற்று என்பது இயல் பினையுடைத்து என்றும் வேறுபாட்டுடன் காணப் படுகின்றன.

"ஆங்கந் நான்கே மொழி புணர் இயல்பே" (தொல். எழுத்து 108)
என்னும் நூற்பாவில் இயல்பே என்னும் சொல் இயல்பு அல்லது இலக்கணம் என்னும் பொருளில் வந்துள்ளது.

உகரமொடு புணரும் புள்ளியிறுதி
யகரமும் உயிரும் வருவழி இயற்கை" (தொல் எழுத்து 164)

என்னும் நூற்பாவில் இயற்கை என்னும் சொல் இயல்பு என்னும் பொருளில் வந்துள்ளது.

எனவே இயல என்பது இயல்பினையுடைய என்றும் இயலும் என்பது வெளிப்படும் என்னும் பொருளிலும் இயற்று என்பது இயல் பினையுடைத்து என்னும் பொருளிலும் இயல்பே என்பது இயல்பு அல்லது இலக்கணம் என்னும் பொருளிலும் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம்.

இல்லை என்னும் சொல் இலவே, இன்றே என்னும் வடிவங்களில் பயின்றுள்ளது. இம்மூவகை வடிவங்களும் இருபத் தோரிடங்களில் பயின்று உள்ளன.[30] உண்டு என்பதன் மறுதலையாகிய இல்லை என்பதை ஒருமையில் இன்று எனவும், பன்மையில் இலவே என்றும் கூறிச் செல்கின்றார். இல்லை என்பது இரண்டிடத்து ஆளப்பட்டுள்ளது.

"மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே. (தொல் எழுத்து 5) என்ற நூற்பாவில் ஒருமையில் இவ்வெதிர்மறை பயன் படுத்தப் பெற்றுள்ளது
"அவற்றுள்

கரமும் கானும் நெட்டெழுத்திலவே (தொல். எழுத்து 135,) என்ற நூற்பாவில் எதிர்மறைப் பன்மையில் வந்துள்ளது. சில நூற்பாக்களில் (183, 192, 301, 35, 412,) இன்றே என்பதும் இலவே என்பதும் இன்றி எனத்திரித்துப் பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளமை கருதத் தக்கது. வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை (340) என்ற இடத்தில் வல்லெழுத்து வருவழி னகரம் கெடும் என்ற பொருளில் வந்துள்ளது.

---

30 தொல் எழுத்து. 5, 63, 73, 77, 135, 142, 147, 174, 183, 192 202, 227, 247, 307, 340, 351, 353, 392, 412, 424, 476

ஈற்றது என்னும் சொல் "வகரக்கிளவி நான்மொழி ஈற்றது" என்னும் நூற்பாவில் வந்துள்ளது. வகரம் என்றும் எழுத்து நான்குமொழியின் ஈற்றதாம் என்னும் பொருளில் வந்துள்ளது. இச்சொல் மிகுதியான பயிற்சியின்றிக்காணப் படுகின்றது.

உடைத்தே என்னும் சொல் உளவே என்னும் மற்றொரு வடிவத்துடன் பதினொரு இடங்களில் பயின்றுள்ளது. உடைத்து[31] என்பதும், உளவே[32] என்பதும் முறையே ஒருமையை உணர்த்தும் நிலையிலும், பன்மையை உணர்த்தும் நிலையிலும் ஆளப்பட்டுள்ளன. இவற்றுள் உடைத்தே என்னும் சொல் உடைய என்றும் இடன் உடைத்தே என்றும் இருவகையில் பயின்று உள்ளது. உடைய என்பது உரிமை உடைய என்னும் பொருளில் ஆளப் பட்டுள்ளது.

"வரன்முறைமூன்றும் குற்றெழுத்துடைய (தொல். எழுத்து 136) என்னும் நுற்பாவில் கரம், காரம் கான் என்னும் மூன்று சாரியையும் நெட்டெழுத்துக்களுக்கு உள்ள விலக்குப் போலன்றி மூன்றும் வருவதற்கு உரிமை உடைய என்னும் பொருள் பெற அமைந்துள்ளது. மற்றைய இடங் களில் இடன் உடைததே என்றே இதன் ஆட்சி அமைந்துள்ளது.

"அவற்றுள்

இகர இறுபெயர் திரிபிடன் உடைத்தே"

(தொல் எழுத்து 154)

என்னும் நூற்பாவில் முன் கூறப்பெற்ற விதிகள் அன்றி, மற்றோர் விதியைச் சிறுபான்மை அடையவும் இடனுண்டு என்னும் பொருளில் இது ஆளப் பெற்றுள்ளது. உயிர் ஈறாகிய உயர்திணைப் பெயரும், புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும் எல்லா வழியும் இயல்பாக வரும் என்று முன்னர் நூற்பாவில் கூறிய விதியினின்றும் இகர இறு பெயர் மட்டும் திரியும் தன்மை வாய்ந்தது என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். எனவே உடைத்து அல்லது உடைய எனத் தனியே நின்றால் ஒருவகை வெளிப்பாடும், இடன்உடைத்து என்றால் வேறுவகை வெளிப்பாடும் இதற்கு அமைந்துள்ளமையைக் காணலாம்.

'உளவே' என்னும் சொல் பயில்கின்ற இடங்களில் இரண்டிடங்கள் (416, 417) நீங்கலாக மற்றைய இடங்களில் இயல்புக்கு மாறாக (155, 370) மொழியுமாருளவே (186, 360, 400) என்றே ஆளப்பட்டுள்ளது. உம்மை தழுவிய நிலையில் அமைந்து வரும் ஐந்து இடங்களிலும் எச்சவும்மையோடு

---

31. தொல் எழுத்து; 136, 154, 232 327
32. மேலது 155, 186, 360, 370, 400, 416, 417

வந்துள்ளமை கருதத்தக்கது. இயல்பும், மொழியும் என்பதோடு ஆர்பெற்று இந்த 'உள' என்னும் சொல் அமைந்துள்ளது. 'மெல்லொற்று வலியா மரப் பெயரும் உள' (416) என்ற ஓரே இடத்தில் மட்டும் ஆர்சேராமல் வந்துள்ளது.

"ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்.

அம்மிடை வரற்கு முரியவை உளவே'' (417)

என்ற நூற்பாவில் வரற்கும் என்ற இடத்தில் உம்மை பெற்று உரியவை உளவே என்று பயின்றுள்ளது. எனவே உளவே என்னும் சொல்லை ஆசிரியர் உம்மை வருகின்ற இடங்களில் ஆண்டுள்ளார் எனலாம்.

உரிய என்னும் சொல் பத்தொன்பது இடங்களில் பயின்றுள்ளது[33] இச்சொல் (23, 26, 64, 110) நான்கிடங்களில் மட்டுமே இவ்வடிவில் ஆளப்பட்டுள்ளது.

பிற இடங்களில் ஒருமை வடிவாகிய உரித்து என ஆளப்பட்டுள்ளது.

"டறலள என்னும் புள்ளி முன்னர் கசப என்னும் மூவெழுத்துரிய'' (23) என்னும் நூற்பாவில் தனிமெய் பிறமெய்யோடு மயங்கும் மயக்கத்தில் உரிமை கூறும் வகையில் அமைந்துள்ளது.

"உச்சகாரம் இருமொழிக் குரித்தே (75) என்னும் நூற்பாவில் சகர உகரம் இருமொழிகளுக்கு ஈறாம் உரிமையது என்னும் ஒருமைத் தன்மை உடைய உரிமை கூறும் சொல்லாக அமைக்கப்பட்டுள்ளது. உரிமைத் தன்மைக்கும் உடைமைத் தன்மைக்கும் உள்ள வேறுபாடு உடைய உரிய என்ப வற்றுள் காணப்பெறும் வேறுபாடாகும்.

உறழ்வே என்னும் சொல் மூன்றிடங்களில் பயின்றுள்ளது.[34] விதிகளில் இதுதான் என்று அறுதியிட்டுக் கூறுவது ஒருநிலை இதுதான் விதி என்று கூறாமல் இவ்வாறும் வரலாம் அவ்வாறும் வரலாம் என்னும் இரண்டு நிலையைத் தழுவும் இடங்களில் உறழ்வு என்னும் சொல் ஆளப்பட்டு உள்ளது.

"மீனென் கிளவி வல்லெழுத்து றழ்வே'' (239) என்னும் நூற்பாவில் மீன் என்னும் சொல் வருமொழியில் வல்லெழுத்து வரின் திரிந்தும் திரியா மலும் நிற்கும் மீன்கண், மீற்கண், மீன் சினை மீற்சினை எனத் திரியாமலும் திரிந்தும் நிற்கின்றமையை உரையாசிரியர்கள் உதாரணம் காட்டியுள்ளனர். இவ்வாறே உறழ்வு என்று கூறுகின்ற மற்றைய இடங்களிலும் காணலாம்.

---

33. தொல் எழுத்து; 23, 26, 64, 75, 110, 177, 208, 290, 214, 233, 234, 237, 268, 301, 308, 344, 404, 409. 480.

34. தொல் எழுத்து 339, 342, 387

என்மனார் என்னும் சொல் ஏழுவடிவங்களில் ஆளப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் சிறுசிறு வேறுபாடு உளது எனினும் துல்லியமாக வரையறுக்க இயலவில்லை. என்ப[34] என்ப உணருமோரே[35] என்ப சிறந்திசினோரே[36] என் மனார் புலவர்[37] என் மனார் புலமையோரே[38] உணர்ந்தோர் கண்டவாறே[39] மொழிப[40] என இவ் வடிவங்கள் காணப்படுகின்றன. தொல்காப்பியர் தமக்கு முன்னுள்ளோர்கருத்துக்களைச் சுட்டும்பொழுது என்ப முதலிய சொற்களால் உணர்த்துகின்றார் எனலாம். எனினும் 'என்ப' என்று கூறுவதற்கும் என்மனார் புலவர் என்று கூறுவதற்கும், நுண்ணிதின் உணர்ந்தோர்' என்று கூறுவதற்கும் 'சிறந்திசினோரே' என்று கூறுவத கும் நிரம்ப வேறுபாடுள்ளது.

நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர் (தொல். எழுத்து 6)

என்ற நூற்பாவில் சுட்டப்பட்ட புலவர் என்னும் சொல், இலக்கணநூலார் என்றுகருத் இடம் இருக்கின்றது.

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறு (தொல் எழுத்து 7)

என்ற நுற்பாவில் நுண்ணிதின் உணர்ந்தோர் என்ற குறிப்பு நுண்ணிதாக ஓசையை அளக்கவல்ல இசைப் புலவர் கண்ட நெறியைத் தாமமேற்கொள்வதாகக் கூறியுள்ளார் என நினைக்க இடமிருக்கின்றது; இக்கருத்துச் சிந்தனைக்குரியது.

'செவ்விதென்ப சிறந்திசினோரே; (தொல் எழுத்து. 295)

என்னும் நூற்பாவில் ஒளகார இறுதிப்பெயர் முன்னர் அல்வழி' வேற்றுமைப் பொருள்களில் வரும் வல்லெழுத்து மிக்குழியும் என்று கூறிய பின்னர் அவ்விரு ஈற்றிலும் உகரம் பெறும் என்று கூறவேண்டியவர் 'செவ்வி தென்ப சிறந்திசினோரே' என்று கூறுகின்றார். இது உயர்ந்தோர் வழக்கில் உள்ள நெறி என்பது போன்று சுட்டுகின்றார்.

34. தொல். எழுத்து 3, 4, 19, 20, 21, 88, 113, 119, 160, 164, 194, 197, 242, 334,
35. மேலது 193
36. மேலது 295
37. மேலது 6, 33, 53, 130, 146, 158, 222, 283, 331, 333, 413, 474, 478, 483
38. மேலது 369
39. மேலது 7
40. தொல் எழுத்து: 8, 9, 11, 105, 153. 157, 159, 170, 210, 251, 258, 361, 368, 381, 398, 418,

அதனுல் அது பொது வழக்கன்று என்று எண்ண இடமிருக்கின்றது. உணரு மோர் நுண்ணிதின் உணர்ந்தோர், சிறந்திசினோர் என்பவை அரிதான ஆட்சியாகவே காணப்படுகின்றன. என்ப, மொழிப என்பவை மிகுதியான ஆட்சியாகக் காணப்படுகின்றன

ஒக்கும் என்னும் சொல் ஒத்தது என்னும் வடிவுடனும் வந்துள்ளது. இவ் விருசொற்களும் ஐந்திடங்களில் பயின்றுள்ளன![41] 'ஒத்தது' என்னும் சொல் இரண்டு தன்மைகள் பொருந்தி வரும் பொழுது இரண்டும் விழுக்காடளவில் ஒத்தியங்கும் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. பூவினொடு விரிந்த கூந்தல், பூவொடு விரிந்த கூந்தல் என்று சாரியை பெற்றும், பெறாதும் வருகின்ற நிலை, ஒத்தது எனக் கூறியுள்ளார் (132) ஒத்தது என்பதற்கு மற்றோர் வெளிப்பாடுங்காணப்படுகின்றது. ஒத்தது என்பதற்கு நேர்ந்தது என்றோ பொருந்திற்று என்றோ பொருள் கொள்ளுமாறும் அமைத்துள்ளார். அளவுப் பெயர்கள் முன்னர், குறை அளவுப்பெயர்கள் வருபாயின் 'ஏ' என்னும் சாரியை பொருந்தும். நாழியே அழாக்கு, உழக்கே யாழாக்கு (164) என வரும். ஒக்கும் எனபது முன்னர்க் கூறிய நிலையே இதற்கும் ஒக்கும் என்பதாக அமைநதுள்ள இடங்களும் உண்டு. 'கன்' என்னென்னும் சொல் ஏனை எகின் என்னும் சொல்லோடு தோற்றத்தில் ஒத்து விளங்கும். அதாவது அகரமும், வல்லெழுத்தும் பெற்று முடியுப (346) என்று கூறுகின்றார். எனவே விழுக்காட்டினுல் 50./· ஒத்தது என்பதும் நேர்ந்தது என்பதும் ஒத்து விளங்கும் என்பதும் ஆகிய மூவகை நிலையில் ஒக்கும் அல்லது ஒத்தது ஆளப் பட்டுள்ளன எனலாம்.

ஒற்றும் என்னும் சொல் ஓர் இடத்தில் வந்துள்ளது.[42] 'யவ முன் வரினே வகரம் ஒற்றும் (206) என்னும் நூற்பாவில் ஒற்றும் என்னும் சொல்லை ஆண்டுள்ளார்.

லகரம், யகரம், மகரம் ஆகியன வருமொழியாய் வரும் பொழுது இடையில் வகரம் ஒற்றாய்வரப் பெறும். பொதுவாக மெய்யெழுத்துக்களைக் கூறும் பொழுது வகரம், யகரம், மகரம் எனக் கூறுகின்ற இடங்களிலெல்லாம் ஒற்றெழுத்துக்களையே குறிப்பது மரபாயிருக்கின்றது. எனவே வகரம் வரும் எனக் கூறினாலே ஒற்று என்பது பெறப்படுமாயினும் வகரம் ஒற்றும் எனக் கூறியது சிந்திப்பதற்குரியதாகும். வகரம் உடம்படுமெய்யாக வருகின்ற இயல்புடைய எழுத்து யகரம் வரும்பொழுதும், வகரம் வரும் பொழுதும் இடையில் வருகின்ற வகரம் உடம்படுமெய்யாக அன்றிப் புணர்ச்சியில் தோன்றுகின்ற ஒரு மெய்யெழுத்து என்று சுட்டுதற்கு 'வகரம் ஒற்றும்' என்று

41. தொல், எழுத்து, 132, 164, 346, 4·7, 4·1
42. மேலது 206.

கூறினார், என நினைக்க இடம் உள்ளது. இக்கருத்தினை அறிஞர்கள் சிந்தித்து முடிவு செய்தல் வேண்டும்.

**காலே** என்னும் சொல் ஏழு இடங்களில் பயின்றுள்ளது[45] 'காலை' என்னும் சொல் பொழுது என்னும் பொருள் தருகின்ற சொல்லாகப்பயன்படுத்தப் பட்டுள்ளது. 'அடுங்காலை நீர்கொண்ட வெப்பம் போல்' (நாலடி 68) எனப் பொழுது என்னும் பொருளில் பல இடங்களில் வந்துள்ளது. இதனுடன் 'ஆன' என்னும் சொல் சேர்ந்து வருகின்ற நிலை 'ஆன' என்னும் தலைப்பில் ஆராயப் பெற்றது.

கெடும் என்னும் சொல்கெடுத்தே என்னும் வடிவிலும் பயின்றுள்ளது. இவ்விரு சொற்களும் பதினொரு இடங்களில் பயின்றுள்ளன[45], கெடுத்து (138, 463) என்று இரண்டிடங்களில் பயின்ற இச்சொல் பிறவினையாக ஆளப்பட்டுள்ளது ஒன்றன் ஆக்கம் அல்லது தோற்றம் அல்லது வருகை பிற ஒன்றின் இயல்பைக் கெடுக்கும் இடங்களில் இச்சொல்லை ஆண்டுள்ளார். புள்ளியீற்றின் முன் வரும் உயிர் தனித்து நில்லாது மெய்யொடு சேரும். அவ்வாறு சேரும்பொழுது மெய்யின் இயல்பைக் கெடுத்துச் சேரும் ஆல்+அடை=ஆலடை (138) என்று லகர ஒற்றினை உயிர்மெய் வடிவங் கொடுத்து அதன் மெய்வடிவினைக் கெடுத்து நின்றது. இவ்வாறே பிற இடத்திலும் (463) 'கெடுத்து' என்னும் சொல் வழங்கப் பெற்றுள்ளது.

'கெடும்' என்னும் சொல் தன் வினையாக அமைந்துள்ளது. ஓரெழுத்துத் தானே கெடுவதனைக் 'கெடும்' என்னும் சொல்லால் சுட்டுகின்றார். கெடும் என்பது ஈரிடங்களில் 'துவர என்ற அடையுடன் ஆளப்பட்டுள்ளது (348, 479) 'துவர' என்பதற்கு முற்றிலும் என்பது பொருள். இதனை மிகையாகக் கொண்டு உரையாசிரியர்கள் விளக்கம் கூறியுள்ளனர். 'ஐயொடுங் கெடும்' (178) 'மெய்யொடுங் கெடும்' என்று ஒடு உருபு கொடுத்தும் இச்சொல் ஆளப் பட்டுள்ளது. வகரம் முன்பாகவும், ஐகாரம் அடுத்தும் வருகின்ற 'வை' என்பது இரண்டும் கெடும் என்று கூறவந்தவர் ஐயொடுங் கெடும் என்று கூறுகின்றமையால் 'ஐ' தலைமையுடையதாக இருப்பதனையும், குற்றியலுகரத்தோடு நின்ற மெய் 'கெடும்' என்று கூறும்பொழுது மெய்க்குத் தலைமைத் தன்மை கொடுத்து 'மெய்யொடுங் கெடும்' என்று கூறுவதனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**குறுகும்** என்னும் சொல் ஏழிடங்களில் பயின்றுள்ளது[45] 'குறுகிடன்' என்றும் இவ்வாட்சி உள்ளது (406) 'குறுகுதல்' என்பதற்குக் குறைதல், அணுகுதல், சிறுகுதல், குள்ளமாதல் எனப்பலபொருள் உண்டு.

---

43. தொல் எழுத்து 112, 305, 317, 434, 446, 449, 471
44. மேலது 138, 176, 178, 201, 260, 348, 391, 454, 463, 464, 479,
45. தொல் எழுத்து: 37, 52, 161, 188, 330, 406, 440.

"இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே
கடப்பாடறிந்த புணரியலான" (37)

என்னும் நூற்பாவில் மாத்திரை குறைதலைக் குறுகும் என்ற சொல்லால் கூறியுள்ளார்.

இவ்வாறே பிற இடங்களிலும் மாத்திரை குறைதலைக்குறுகும் என்ற சொல்லால் கூறியுள்ளார். மாத்திரை குறையும் என்ற நிலையில் 52, 330, 406 ஆகிய மூன்று நூற்பாக்களில் இச்சொல் பயின்றுள்ளது. நெடு முதல் குறுகும் என மூன்று இடங்களில் (161, 188, 440) ஆளப்பட்டுள்ளது. முதலில் நின்ற நெட்டெழுத்து,குற்றெழுத்தாக மாறிப்புணரும்நிலையை இவ்வாறு சுட்டியுள்ளார்.

கொளலே என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது[46]. கொளல் என்பது கொள்ளுகை என்னும் பொருளுடைய ஒரு சொல். கொளல் வினா என நன்னூல் (நன். 385 உரை) உரை கூறுவதும் இக்கருத்துப்பற்றியதே. கொள் வழிக் கொளா அல் (தொல். பொ. 307) எனத் தொல்காப்பியர் சுட்டுவதும் கொள்ளச் செய்கை என்னும் பொருளிலேயே வந்துள்ளது.

"உணரக் கூறிய புணரியல் மருங்கின் கண்டு செயற் குரியவை கண்ணினர் கொளலே. (405) என்னும் நூற்பாவில் கண்ணினர் கொளல் என இச்சொல் ஆளப்பட்டுள்ளது. தொல்காப்பியர் புறனடையில் பயன்படுத்திய இவ்விருசொற்களும் அரிதான வழக்காகும். வழக்கினுள் கூறப்பட்ட விதிகட்கு மாறுபட்ட இடங்கள் வருமானால் நன்கு சிந்தித்துக் கருதி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்னும் குறிப்புப்படக் கூறியுள்ளார்.

சிவணும் என்னும் சொல் பதினொரு இடங்களில் பயின்றுள்ளது[47]. இச்சொல் பொருந்தும் அல்லது பொருந்தி நடைபெறும் அல்லது புணரும் என்னும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது. தனிமெய்களின் நடப்பு அகரத்தொடு பொருந்தி நடக்கும் (46) என்னும் இடத்தில் சிவணும் என்னும் சொல்லை ஆண்டுள்ளார். கூறப்பெற்ற பதினொரு இடங்களில் இரண்டு இடங்கள் விதிவிலக்காக அமைந்துள்ளன. பொருந்தும் என்ற நிலையினின்றும் போன்றது என்ற பொருளிலும் இச்சொல ஆளப்பட்டுள்ளது, என்துப் குறிப்பிடத்தக்கது. பொருவு என்பது ஒப்புப் பொருளில் வருவதால், அதே ஒப்புப்பொருளில் சிவணும் என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது.

உச்சகாரமொடு நகாரஞ்சிவணும் (79) என்ற நூற்பாவில் உச்சகாரம் மொழியிறுதியில் இரணடு இடங்களில் வருவது போன்று நகரமும் இரண்டிடங்களில் மொழியிறுதியில் வரும் என்று கூறியுள்ளார்.

---

46 தொல். எழுத்து. 405
மலது 46, 79, 169, 181, 184. 198, 228, 269, 283, 365, 420

"ஊ என் ஒரு பெயர் ஆ வொடு,சிவணும்" (269) என்ற நூற்பாவிலும் பொருவு பொருளில் 'சிவணும்' என்பது ஆளப்பெற்றுள்ளது.

சுட்டு என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது.[48] நிறுத்த சொல்லும், குறித்து வருகிளவியுமாய் நின்று புணருகின்ற நிலையில் பொருள் பொருத்த முறப்புணர்வதே இயல்பு; ஆனால் தலைதடுமாற்றமாக உள்ள மரூஉ மொழி போன்றவையும புணரும் தன்மைக்கு உரியன என்று கூற வரும் இடத்தில் அதனைப் 'புணர் நிலைச் சுட்டு' எனக்குறித்துள்ளார்.

''மருவின்தொகுதி மயங்கியல் மொழியும் உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே'' என்ற நூற்பாவில் நின்ற சுட்டு என்னும் புலப்பாடு, புணர்ச்சி ஈண்டுச் சுட்டளவிலேமட்டும் நிற்றது. அதனை நேரடியாகப் புணர்ச்சி என்று கூற இயலாது என்ற நிலையைக் கருத்தில் கொண்டு கூறியுள்ளார்.

திரியாது என்னும் சொல் ஆறு இடங்களில் பயின்றுள்ளது.[49] திரியா என்ற வேறு வடிவத்துடனும் பயிலும் இச்சொல் பெரும் பான்மையான இடங்களில் இயல்பை உணர்த்தும் சுட்டுச்சொல்லுடன் கூடியே வந்துள்ளது. (207, 394,427,435) 'ஆயியல் திரியாது' என்பதே அதன் பயில்திறமாகக் காணப் படுகிறது. இரண்டிடங்களில் 'ஆயியல்' என்னும் சொல் சேராமல் வந்துள்ளது (429, 462)

" அந் நான் மொழியுந் தந்நிலைதிரியா'' எனவும், " நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா எனவும் அவ்விரண்டிடங்களிலும் தனித்து நின்று திரிபின்மையை உணர்த்தி நிற்கின்றது. மற்றைய இடங்களில் இயல்பில் திரியாது என்றே பொருள்கொள்ளுமாறு அமைந்துள்ளது.

தெரியுங்காலை என்னும் சொல் காலை என்னும் பொழுது எனப்பொருள் படும் சொல்லுடன் இயைந்து ஈரிடங்களில் பயின்றுள்ளது[50]. தெரியுங்காலை என்பது ஆராயும் பொழுது அல்லது நுணுக்கமாக உணரும் பொழுது என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. பொதுநோக்கில் பார்க்கத் தெரியாத ஒன்று சிறப்பு நோக்கோடு ஊன்றிப்பார்த்தாலே தெரியும் என்னும் இடங்களில் இத்தகைய சொல்லை ஆசிரியர் ஆண்டுள்ளார். மகரக் குறுக்கம் செவிப்புலனால் ஓசை நுண்ணிதின் உணர்ந்து ஒலிக்கும் அளவைக்கொண்டு கால் மாத்திரை அளவு ஒலிக்கிறது என்று கூறவந்த பொழுது 'தெரியுங்காலை' (13) என்னும் சொல்லால் புலப்படுத்தினர். மிகக்குறைந்த இடங்களிலேயே இத்தகைய ஆட்சி வந்துள்ளது.

---

48. தொல். எழுத்து 111.
49. மேலது 207, 394, 427, 429, 435, 462
50. தொல். எழுத்து. 13, 22.

தோன்றும் என்னும் சொல் இருவேறு வடிவங்களில் பயின்றுள்ளது. பதினைந்து இடங்களில் 'தோன்றும்' எனவும், 'தோன்றிய நெறியே' எனவும் பயின்றுள்ளது[51]. தோன்றும் என்பது முன்னில்லாத ஒன்று வந்து தோன்றும் என்று பொருள்படும்.

"மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்" (28)
"யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்" (29)

என வருகின்ற இடங்களில் அப்பொருள்படுவதைக் காணலாம்.

ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொடும் இரண்டிறந்த எழுத்துக்களானும் ஆகும். மூவகைச் சொற்கள் வழக்கு நெறிக்கண் உண்டு என்று கூறுகின்ற இடத்தில் (45) 'தோன்றிய நெறியே' எனக் கூறுகின்றார். வழக்கிடத்து இயல்பாகவே தோன்றிய முறையாக இவை காணப்படுகின்றன என்று கூறுகிறார். 'தோன்றும்' என்னும் சொல் 'உறழ' என்னும் சொல்லுடன் சேர்ந்து இரு இடங்களில் (215. 395) பயின்றுள்ளது. 'வல்லெழுத்தியற்கை உறழத் தோன்றும்' என்னும் இடத்தில் வல்லெழுத்து தோன்றுதலும், தோன்றாமல் வருதலும் உண்டு எனக் கூறுகின்றார். முன்பு கூறிய உறழ்ச்சியில் தோன்றும் நிலை அதாவது ஒரெழுத்துத் தோன்றுதலை இவ்வாறு குறிப்பிடுகின்றார். 'நேரத் தோன்றும்' (134) எனவும் இது பயின்றுள்ளது. கரம், காரம், கான் என்னும் சாரியைகளை நேரத் தோன்றும் எனக் கூறுகின்றார். நேரத் தோன்றா எழுத்துச் சாரியைகளும் உண்டு என்னும் பொருள்பட இவ்வாட்சி அமைந்துள்ளது. அறியத் தோன்றும் (226) மெய் பெறத் தோன்றும் (363) எனவும் பயின்றுள்ளது.

தோன்றாது என்னும் சொல் நான்கிடங்களில் பயின்றுள்ளது.[52] தோன்றாது என ஒருமையாகவும் தோன்றா எனப் பன்மையாகவும் பயின்றுள்ள இம்மறுதலை வினைச்சொல் முற்ற, துவர, உணர என்னும் எச்சச் சொற்களுடன் சேர்ந்தே பயின்றுள்ளது. ஒரு சொல் முழுமையும் கெடாது ஒரு பகுதி மட்டிலும் மறைகின்ற நிலையை இவ்வாறு சுட்டுகின்றார்.

"எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதி மெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றியலுகரம் முற்றத் தோன்றாது,' (128)

என்ற நூற்பாவில் அக்குச்சாரியை வடிவம் தெரியாத நிலையில் குற்றியலுகரம் கெட்டு ஈமக்குடம் கம்மக்குடம் தமிழக் கூத்து என்றாற் போல வரும் 'அக்கு' என்னும் சாரியை சேர்ந்திருப்பதே மேற்போக்காகக் காண்போர்க்குத்

51. தொல். எழுத்து. 28, 29, 35, 39, 45, 56, 100, 134, 137, 150, 195, 215, 226, 363, 395.
52. தொல். எழுத்து. 128, 152, 410, 482

தெரியாது எனக் கூறினார். 'முற்றத்தோன்றா' என்று வருகின்ற மற்றோர் இடத்து (152) 'முற்ற' என்னும் சொல்லினை மிகையாகக் கொண்டு உரை கூறுவர் நச்சினார்க்கினியர்.

யகரம் வருமொழியாக வருமிடத்துக் குற்றியலுகரம் 'துவரத் தோன்றாது' என்று கூறுகின்றார். குற்றியலுகரமாக வரும் ஆறு ஈற்றிலும் இவ்வாறு தோன்றாது என்னும் பொருளில் 'துவர' என்னும் குறிப்பு வந்துள்ளது. உணரத் தோன்றா (482) என்னும் பயில்வு உணருமாறு தோன்றா என்று பொருள் படுகின்றது.

நவிலா என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது[53]. நவில் என்னும் சொல் சொல்லுதல், கற்றல், பாடுதல், பழகுதல், தாங்குதல், விரும்புதல், குறித்தல் என்னும் பல பொருளையுடைய ஒரு சொல் "செல்சமந்தொலைத்த வினை நவில் யானை" (பதிற். 824) என்னும் இடத்தில் பழகுதல் என்னும் பொருள் பட வந்துள்ளது. தொல்காப்பியர் நவில் என்பதைப் பயிலுதல் என்னும் பொருளில் ஆண்டுள்ளார். ஆகாரம் எதிர்மறைப் பொருளை உணர்த்தி நின்றது.

நிலையயல் என்னும் சொல் 'நிலைத்தே' 'நிலையும்' 'நிலையே' என்ற வடிவங்களிலும் பயின்றுள்ளது. இந்நால்வகை வடிவங்களும் இருபத்தைந் திடங்களில் பயின்றுள்ளன[54]. நிலையயல் என்பது ஒன்றன் நிலைத்த தன்மையைக் காட்டுகின்ற சொல். இச்சொல் இரண்டிடங்களில் (15, 104) பயின்றுள்ளது.

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையயல்' (15) எனவும்
'அவற்றுள் மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையயல்'

எனவும் பயின்றுள்ளது. மெய்யின இயல்பும், மொழியீற்றில் மெய்யின் இயல்பும் புள்ளிபெற்றே நிற்கும் என்பதனை 'நிலையயல்' என்னும் சொல் புலப்படுத்துகின்றது.

நிலையே என்னும் மற்றொரு வடிவம் மூன்றிடங்களில் பயின்றுள்ளது. (18, 25, 171) ஏகாரம் தேற்றப் பொருளிலும், அசையாகவும், நிற்க இச்சொல் பயின்றுள்ளது. நிலைத்தது எனவும, நிலைமைக்கண் எனவும் இவ்விடங்களில் இச்சொல பயின்றுள்ளமையைக்காணலாம்.

'நிலையும்' என்னும் மற்றொரு வடிவம் நிற்கும் என்னும் பொருளில் ஐந்திடங்களில் பயின்றுள்ளது. (127, 297, 299, 347, 408) உருபியல் நிலையும் முதலியல் நிலையும், ஆயியல் நிலையும், எனமுன் கூறிய தன்மையில்

---

53. தொல். எழுத்து. 74.

54. தொல். எழுத்து. 15, 18, 25, 104, 121, 127, 171, 220, 281, 287, 297, 299, 309, 324, 347, 352, 374, 377, 378, 388, 393, 402, 408, 419, 422,

புணரும் என்றோ வரும் என்றோ பொருள்படும் நிலையில் மற்றைய இடங்களில் (220, 281, 287, 309, 324, 352, 377, 378, 388, 393, 402, 419, 422) இச்சொல் ஆளப்பெற்றுள்ளது என்பது நினைக்கத்தக்கதாகும்.

நிலையாது என்னும் எதிர்மறைச்சொல் நிலையா எனவும் வந்துள்ளது. இச்சொல்லின் இருவடிவங்களும் இரண்டிடங்களில் பயின்றுள்ளன.[55]

நிலையாது என்னும் ஒருமை உணர்த்தும் இச்சொல் முன்பு நின்ற ஒன்று வேறோர் நிலையில் நில்லாது என்னும் பொருளில் வந்துள்ளது. எல்லாம் என்னும் விரவுப்பெயர் உருபு புணர்ச்சியில் இயல்பில் நின்று முடியும் வேற்றுமைப்புணர்ச்சியில்லாத விடத்து வற்றுச்சாரியை நில்லாததாய் முடியும்; வேற்றுமைப் புணர்ச்சியில் நிலை பெறுகின்றவற்று அல்வழியில் நில்லாது என்னும் கருத்தில் இது ஆளப்பட்டுள்ளது (322). நிலையா என்னும் பன்மை உணர்த்துகின்ற சொல்லும் இவ்வகைப் பொருள் படவே வந்து உள்ளது (231).

நிறைக்கும் 'என்னும் சொல்' நிறைவாகும் என்னும் வடிவுடன் இரு இடங்களில் பயின்றுள்ளது[56]. குறையுடைய ஒன்றனை நிறைக்கும் என்னும் பொருளில் இரண்டிடங்களிலும் இச்சொல் ஆளப்பட்டுள்ளது.

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத்திம்பர் ஒத்த குற்றெழுத்தே (41) எனவும்;
ஐ ஔ என்னும் ஆயீரெழுத்திற்
கிகர உகரம் இசை நிறைவாகும் எனவும்

இரண்டிடங்களிலும் வந்துள்ளது. இசை நிறைவாகும் என்ற இடத்தில் ஐ ஔ என்பன குறில் வடிவம் இல்லா எழுத்துக்களாகும். அவற்றிற்கு இகரமும், உகரமும் செயற்கையாக 'ஆகும்' என்னும் குறிப்பில் அவற்றின் செயற்கைத்தன்மையும் புலப்பட 'ஆகும்' என்னும் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார்.

நிற்றல் என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது.[57]
"ஞ ந மவ என்னும் புள்ளி முன்னர்
யஃ கான் நிற்றல் மெய் பெற்றன்றே"

என்னும் நூற்பாவில் நிற்றல் என்னும் சொல்லை நிலைபேறு என்னும் பொருளில் ஆண்டுள்ளார். வழக்கிறந்ததாகக் கருதப்படும் இவ்விலக்கணத்தின் பொருண்மை முழுமையும் அறிய இயவில்லை. உரையாசிரியர்கள்

---

55. தொல். எழுத்து. 231, 322,
56. தொல் எழுத்து. 41, 42
57. மேலது;— 27

இருவரும் இவ்விடத்தில் இரு சொற்கள் சேர்ந்து நிற்பவனவற்றையே உதாரணமாகக் காட்டியுள்ளார்.

பண்பே என்னும் சொல் இரண்டிடங்களில் பயின்றுள்ளது[62]. இச் சொல் பயின்ற இரண்டிடங்களில் 'ஆகிய' என்னும் சொல்(122) லும் நிலை இய என்னும் சொல்லும் (146) இயைந்துள்ளன. வற்று என்னும் சாரியை அவை என்னும் சொல் முன்னர் வரும் பொழுது வகரம் கெட்டு அகரம் நிற்றலாகிய பண்பினையுடைத்து என்று கூறுகின்றார். எனவே வகரம் கெடாமல் நின்று புணர்வது இல்லை என்பது இதன் கருத்தாகும். இத் தன்மை பற்றியே நன்னூலார் 'வற்று' என்பதனைச் சாரியையாகக் கொள்ளாமல் அற்று என்பதனையே சாரியையாகக் கூறியுள்ளார். தொல்காப்பியர் அற்று என்பதனைப் பொருவுப் பொருளில் வரும் சொல்லாக குறித்துள்ளார். எனவே 'வற்று' என்பது சாரியை எனக் கூறி அதன் வகரம் அக்காலத்தும் வருதல் இல்லை எனக் கூறியுள்ளார். எழுத்து வேற்றுமை யால் பொருள் வேறு படுதல் போன்று எடுத்தல், படுத்தல், நலிதல் என்கின்ற ஓசை வேற்றுமையாலும் பொருள் வேறு படுவது என்பது சொற்களுக்கு நிலை பெற்ற பண்பு (141) என்று கூறியுள்ளார்.

நிறை பிலவே என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது. [58] நிறைக்கும் என்பதன் மறுதலையாகிய நிறைபிலவே என்னும் சொல் அளபு என்பது போன்று நிறைபு என நின்று எதிர்மறைத்தன்மைக்குரிய 'இல்' பெற்றுத் தேற்றேகாரம் சேர்ந்து வந்துள்ளது. மொழியாந் தன்மைக்குரிய அல்லது சொல்லாந் தன்மைக்குரிய நிறைபு இல்லாமை என்று குறில் ஐந்தையும் குறிக்கும் ஆசிரியர் 'நிறைபிலவே' என்னும் (44) சொல்லாற்சுட்டியுள்ளார்.

நீடும் என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது. [59] முன்னுள்ள நிலை யினின்றும் நீண்டு முடியும் தன்மையினை 'நீடும்' எனக் குறிக்கின்றார். ஆறு என்னும் சொல் அகல், உழக்கு என்பனவற்றின் முதல் நீடும் என்று குறித்து உள்ளார். (458). ஆறு என்பது நெடு முதல் குறுகிய பஃது என்பதை ஏற்று அறுபஃது என்றாகும்; (440) என்ற முன்னைய விதியினின்று மாறி நீடும் என்பது திரிந்ததன் திரிபாக வரும் என்று கூறுவார் 'நீடும்' என்று கூறியுள்ளார்.

நுவன்றிசின் என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது[60]. நுவல் என்பதற்குச் சொல்லுதல் என்பது பொருள். 'இசின்' என்பது இறந்தகால இடைநிலையாக வரும் என்பர்.[61] 'இசின்' என்பதோர் இடைச்சொல் தொல்காப்பியத்தில்

58 தொல். எழுத்து. 44
59 மேலது 458
60 மேலது 102
61 நன் 145 விருத்தியுரை.
62 தொல். எழுத்து. 122, 141

காணப்பெறவில்லை. ஆனால் 'சின்' என்பது முன்னிலை அசையாக வரும், படர்க்கையிலும் வரும். 'இ' காலம் காட்டும் இடை நிலையாகக் கொண்டால் 'நுவன்றிசின்' என்பது, கூறினர் என்னும் படர்க்கைப் பொருளையே உணர்த்தும், இது சிந்திக்கத்தக்கது.

"மெய்தெரி வளியிசை அளவு நுன்றிசினே« (192) என்று கூறுமிடத்தில் புறத்தில் ஒலிக்கும் காற்றினது ஒலிக்கு அளவு கூறினேன் எனத் தொல் காப்பியர் கூறியுள்ளார். இசின் என்பது தன்மையில் வந்துள்ளதாக இளம் பூரணர், நச்சினார்கினியர், இருவரும் கூறியுள்ளனர்.

பயின்றே என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது.[63] ஒருமுறை, இருமுறை நடைபெறுவதற்கும், பல்கால் நடைபெறுவதற்குமுரிய வேறுபாடு, படித்தல், பயிலல் என்னும் சொற்களிடையே உண்டு. யாவர் என்னும் சொல்லில் வகரம் கெட்டு யார் என வருவதும், யாது என்பதில் வகரம் சேர்ந்து யாவர் எனவரு வதும், மருமுடிவில் மிகவும் பயின்று திரியும் எனக் கூறுகின்றார் எனவே அது பெரும்பான்மை வழக்காகும் என்ற நிலையை வெளிப்படுத்தியுள்ளார்.

பொருட்டாகும் என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது.[64] பொருண்மைத்து என்னும் பொருளில் ஆளப்பெற்ற ஒரு சொல் இது. உப்பகாரம் தன்வினை, பிறவினை என்னும் தன்மையில் ஒரு மொழியிடத்து வரும் தபு என்பது இதற்குக் காட்டப்பெற்ற உதாரணம். இச்சொல் பகுத்துக் கூறத் தன்வினையாகவும், எடுத்துக் கூறப் பிறவினையாகவும் வரும். இவ்வாறு பொருள் தரும் இயல்பினைப் பொருட்டாகும் என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு பொருள் நோக்கிய நிலையை இததகைய சொல்லால் சொல்வது இவரியல்பு. இதுவும் அருகியதோர் ஆட்சியாகும். பொருட்டு என்பது சொல்லுருபன்று, வினைத்தன்மை பெற்றது.

மரபே என்பது ஓரிடத்தில் வந்துள்ளது.[65] முன் என்னும் சொல்லின் முன் இல் என்பது மாறிவரும். முன்னில் என்று நிற்கவேண்டிய ஒரு சொல் அதன் இனமாகிய றகரம் பெற்று வருவது புணர்ச்சி விதிகளில் உட்படாத ஒன்று. ஆனால் தொன்று தொட்டு வருகின்ற மரபாக அல்லது இலக்கணமாக இருக்கிறது என்பார் "தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே" "என்று கூறியுள்ளார். மரபு என்பது ஈண்டு இலக்கணம் என்னும் பொருள்படவந்து உள்ளது.

மானமில்லை என்னும் சொல் 'மானம்' 'இல்லை' என்னும் சொற்கள் சேர்ந்த ஒரு சொல்நீர்மைத்து. இது ஏழிடங்களில் வந்துள்ளது.[66]

63 தொல். எழுத்து. 172

64 மேலது 76

65 தொல். எழுத்து. 355

66 மேலது 47, 199, 230, 271, 323, 341, 465,

மானமில்லை என்பதற்குக் குற்றமில்லை என்பது பொருள். விதிக்கப்பெற்ற விதியினின்று சிறிது மாறிவழங்கினும் ஏற்றுக்கொள்ளத்தக்கவற்றை 'மானமில்லை' என்று கூறி வழங்குவதற்கு வகை செய்கிறார். மெய்ம்மயக்கம் வரையறுத்துக் கூறப்பெற்றாலும், எழுத்துக்களின் பெயர் கூறும் பொழுது வேண்டியவாறு மயங்கும் எனக்கூறுகின்றார் (47) மற்றைய இடங்களிலும் அருகியே ஏற்குமுகமாக இச்சொற்களை ஆளுகின்றார்.

மிகா என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது.[67] மிகும் என்னும் மறுதலைச் சொல்லாகிய இச்சொல், பன்மைப்பொருள் குறிப்பது. மிகா என்பது மிக்கு முடியா என ஆளப்பட்டுள்ளது.

மிகும் என்னும் சொல் பதினேழு இடங்களில் பயின்றுள்ளது.[68] புணர்ச்சி இயல்பாகவும், விகாரமாகவும் நிகழும் எனக்கூறி, அவற்றுள் விகாரம் என்பது தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்றாக நிகழும் என்பர் நன்னூலார்[69]. தொல்காப்பியர் மிகும் என்று கூறிய வற்றையே தோன்றல் என்னும் சொல்லால் நன்னூலார் குறிப்பிடுகின்றார். எழுத்து ஒன்று புதிதாகச்சொற்கள் இயைந்து நிற்கின்ற நிலையில் தோன்றுவதனை மிகுதி என்று கூறுவது தொல்காப்பியர் இயல்பு. 'மிகும்' என்னும் சொல் ஓரிடத்தில் (285) மிகுதி என ஆளப்பட்டுள்ளது. 'கடிநிலையின்றே. வல்லெழுத்து மிகுதி' எனக் கூறுகின்றார்.

முதலாது என்பது ஓரிடத்தில் வந்துள்ளது.[70] முதல் என்ற சொல் முதலும் என்றும் (66) அதன் மறுதலையாக முதலாது என்றும் ஆளப்பட்டுள்ளது. யகரம் ஆவோடல்லது மொழிக்கு முதலாகாது என்னும் இடத்தில் 'முதலாது' என்று கூறுகின்றார்.

முதலே என்னும் சொல் மூன்றிடங்களில் பயின்றுள்ளது.[71] இதுசெல்லுமார் என்ற சொல்லுடன் கூடியும் (61) வந்துள்ளது. மற்றைய இடங்களில் 'முதலே' என்று வந்துள்ளது. முதல் என்னும் சொல், முதல, முதலே என வந்துள்ளது.

மேன என்னும் சொல் ஓரிடத்தில் வந்துள்ளது.[72] மேன என்பது ஏழாம் வேற்றுமை உருபாகக் ஆளப்பட்டுளளது. மேல் என்பது

---

67. தொல். எழுத்து. 273
68. தொல். எழுத்து 133, 203, 204, 217, 223, 229, 235, 243, 245, 280, 285, 310, 325, 354, 357, 426, 472.
69. நன். 153, 154
70. தொல். எழுத்து. 65.
71. மேலது 61, 66, 67.
72. தொல். எழுத்து 82.

மேல் என்பதன் திரிந்த வடிவமாகக் கொண்டு இடத்து என்று பொருள் கொண்டுள்ளனர். சேனாவரையரும் சொல்லதிகாரத்தில் ஏழாம் வேற்றுமை உருபாகவே கொண்டுள்ளார்.[73]

வரின் என்பது ஓரிடத்தில் வந்துள்ளது.[74] இன்னது வந்தால் இது எழும் என்பது போன்ற வெளிப்பாடாக 'வரின்' என்பது வந்துள்ளது.

வருமே என்பது ஐந்து இடங்களில் பயின்றுள்ளது.[75] 'வரின்' என்பது போலன்றி, இன்ன விதிக்கு இது வரும் என்று நிச்சயிக்கும் நிலையில் 'வருமே' என்பது ஆளப்பட்டுள்ளது. இதற்கு இது தான் விதி என்பது போலவே இது பயின்றுள்ளது.

"அவற்று வழி மருங்கிற் சாரியை வருமே" (118) எனவும்

"இரு திசை புணரின் ஏயிடை வருமே" எனவும்

'வருமே' என்பது பயின்றுள்ள இடங்கள் வேறொன்றும் வரும் என்பதற்கிடமில்லா இடங்களாகும்.

வரையார் என்னும் சொல் 'வரை நிலையின்றே' எனவும் 'கடிநிலை யின்றே' எனவும் வேறு வடிவங்களிலும் வந்துள்ளது. சிறுவேறுபாடு உண்டேனும் பொருள் தன்மையில் ஒத்ததாக இம்மூவடிவங்களும் காணப் படுகின்றன. ஆறு இடங்களில் இம்மூவடிவங்களும் பயின்றுள்ளன.[76] 'வரை' என்பதற்கு 'நீக்கு' என்பது பொருள். வரையார், நீக்கமாட்டார் என்னும் பொருள்படும். எனவே ஏற்றுக் கொள்வர் என்பது இச்சொல்லின் பொருளாகும்.

"எல்லா மொழிக்கும் உயிர் வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்" (140)

உடம்படுமெய்யின் வடிவத்தை ஏற்றுக் கொள்வர் என்னும் இடத்தில் வரையார் என்று கூறுகின்றார். வரைநிலையின்று என்பது நீக்கும் நிலைமையின்று என்ற பொருளில் வந்துள்ளது. கடிநிலை என்பதும் இதே பொருளில் வந்த மாற்று வடிவாகும்.

வேண்டும் என்னும் சொல் பத்தொன்பது இடங்களில் பயின்றுள்ளது[77] ஆசிரியர் பிறர் கூறிய விதிகளை 'என்மனார் புலவர்' என்று கூறினாற்

---

73. தொல். சொல். 58 சேனா-உரை.
74. தொல். எழுத்து. 151.
75. மேலது 118, 190, 277, 375, 431.
76. மேலது 140, 265, 219, 315, 389, 421.
77. தொல். எழுத்து. 34, 114, 115, 131, 156, 191, 199, 205, 267, 279, 288, 329, 337, 390, 411, 459, 469, 475.

போலத் தாம் கண்டறிந்த முடிபுகளை விதியாக வகுத்துரைக்குங்கால், 'வேண்டும்' என்னும் சொல்லை ஆண்டுள்ளார். உறழ்ச்சி போன்ற நிலையில்லாமல் நிச்சயமான முடிவு இது என்று கருதும் இடங்களில் இச்சொல்லை ஆண்டுள்ளார் எனலாம்.

இன்னெ வருஉம் வேற்றுமையுருபிற்
கின்னென் சாரியை இன்மை வேண்டும் (131)

என்னும் நூற்பாவில் இன் என்னும் வேற்றுமை உருபு வரும் இடங்களில் இன்சாரியைப் இல்லாமல் வருதல் வேண்டும். இன்சாரியை ஒரு மயக்கத்தைக் கொடுக்கும் என்பதால் இன் இன்றி வருதல் வேண்டும், என்று கூறினார். பாம்பினிற் கடிதுதேள் 'கற்பினின் வழாஅ நற்பல உதவி' என்னும் இடங்களில் இன் சேர்ந்து வழங்குவதை எண்ணியே இன்மை வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

" புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையில்
தம்மினாகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை யிரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கிற்போற்றல் வேண்டும்" (156)

என்னும் நூற்பாவில் வந்துள்ள் வேண்டும் என்னும் சொல் சற்று வேறுபாடான வெளிப்பாடாக இருப்பதாக நச்சர்ணர்க்கினியர் கருதுகின்றார். அதனால் வேண்டும்என்பதை

"வேற்றுமை மருங்கில் சொல்லிய முறையான் வேண்டும் வல்லெழுத்து மிகுதி"—எனக் கொண்டு கூட்டுகின்றார். போற்றல் வேண்டும் என்ற இருசொற்களில் போற்றல் என்பதனை தனியே பிரித்து'கண்டு கொள்ளற்க' எனப் பொருள் கூறுகிற்றார்.

வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்' என்ற தொடரைக் கிடைக்கை முறையிலேயே வைத்து மேற்கூறிய விதிகளை மேலே வேற்றுமைப் பொருட் புணர்ச்சி முடிபு சொல்லுமிடத்துப் போற்றியறிதல் வேண்டும் என இளம்பூரணர் கூறுகின்றார். இது சிந்தனைக் குறியது.

இலக்கண வெளிப்பாடுகளாகத் தொகுத்துக் கூறப்பெற்ற இச்சொற்களே அன்றி இன்னும் பல சொற்களும் உள. அவையெல்லாம் விரிவாகப் பார்த்தற்குரியவை. இவ்வாறு பார்ப்பதால் வெளிப்பாட்டின் முறை தெரிவதோடு உரையில் பிறழ்ச்சி உள்ள இடங்களையும் எளிதாக நிச்சயிக்கலாம். இலக்கண வரலாற்று முறைமையை நிச்சயிக்கலாம்.